# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 2-5 - அந்தாமத்தன்பு
## (ஈஸ்வரன் தனது திவ்யபூஷண திவ்யாயுத திவ்யாவயவ ஸௌந்தர்யங்களோடு வந்து கலக்க, அதனால் ஆழ்வார் துன்பம் தீர்ந்து இன்புறுதல்)

2829 * அந்தாமத்தன்பு செய்து * என்னாவி சேர் அம்மானுக்கு *
அந்தாம வாழ்முடி[1] சங்கு * ஆழிநூல் ஆரமுள **
செந்தாமரைத் தடங்கண் * செங்கனிவாய் செங்கமலம் *
செந்தாமரை அடிக்கள் * செம்பொன் திருவுடம்பே 1

2830 திருவுடம்பு வான் சுடர் * செந்தாமரைக் கண் கை கமலம் *
திருவிடமே மார்பம் * அயனிடமே கொப்பூழ் **
ஒருவிடமும் * எந்தை பெருமாற்கு அரனேயோ! *
ஒருவிடம் ஒன்றின்றி * என்னுள் கலந்தானுக்கே 2

2831 என்னுள் கலந்தவன் * செங்கனிவாய் செங்கமலம் *
மின்னும் சுடர் மலைக்குக் * கண் பாதம் கை கமலம் **
மன்னு முழுவேழுலகும் * வயிற்றினுள *
தன்னுள் கலவாதது * எப்பொருளும் தானிலையே 3

2832 எப்பொருளும் தானாய் * மரதகக் குன்றம் ஒக்கும் *
அப்பொழுதைத் தாமரைப்பூக் * கண் பாதம் கை கமலம் **
எப்பொழுதும் நாள் திங்கள் * ஆண்டு ஊழியூழி தொறும் *
அப்பொழுதைக்கு அப்பொழுது * என் ஆராவமுதமே 4

2833 ஆராவமுதமாய் * அல்லாவியுள் கலந்த *
காரார் கருமுகில் போல் * என்னம்மான் கண்ணனுக்கு **
நேராவாய் செம்பவளம் * கண் பாதம் கை கமலம் *
பேராார நீள்முடி நாண் * பின்னும் இழை பலவே 5

2834 பலபலவே ஆபரணம் * பேரும் பலபலவே *
பலபலவே சோதி * வடிவு பண்பு எண்ணில் **
பலபல கண்டுண்டு * கேட்டுற்று மோந்தின்பம் *
பலபலவே ஞானமும் * பாம்பணை மேலாற்கேயோ! 6

2835 பாம்பணை மேல் பாற்கடலுள் * பள்ளி அமர்ந்ததுவும் *
காம்பணை தோள் பின்னைக்கா * ஏறுடனேழ் செற்றதுவும் **
தேம்பணைய சோலை * மராமரமேழ் எய்ததுவும் *
பூம்பிணைய தண்துழாய்ப் * பொன்முடி அம்போரேறே 7

---
[1] வாண்முடி

2836 பொன்முடி அம்போரேற்றை * எம்மானை நால்தடந்தோள் *
தன்முடிவொன்றில்லாத * தண்துழாய் மாலையனை **
என்முடிவு காணாதே * என்னுள் கலந்தானை *
சொல்முடிவு காணேன் நான் * சொல்லுவது என்? சொல்லீரே 8

2837 சொல்லீர் என்னம்மானை * என்னாவியாவி தனை *
எல்லையில் சீர் * என் கருமாணிக்கச் சுடரை **
நல்ல அமுதம்[2] * பெறற்கரிய வீடுமாய் *
அல்லிமலர் விரையொத்து * ஆணல்லன் பெண்ணல்லனே 9

2838 ஆணல்லன் பெண்ணல்லன் * அல்லா அலியுமல்லன் *
காணலுமாகான் * உளனல்லன் இல்லையல்லன் **
பேணுங்கால் பேணும் * உருவாகும் அல்லனுமாம் *
கோணை பெரிதுடைத்து * எம்மானைக் கூறுதலே 10

2839 * கூறுதல் ஒன்றாராக் * குடக்கூத்த அம்மானை *
கூறுதலே மேவிக் * குருகூர்ச் சடகோபன் **
கூறின அந்தாதி * ஓராயிரத்துள் இப்பத்தும் *
கூறுதல் வல்லாருளரேல் * கூடுவர் வைகுந்தமே 11

**அடிவரவு:** அந்தாமம் திரு என்னுள் எப்பொருள் ஆரா பலபல
பாம்பணை பொன்முடி சொல்லீர் ஆண் கூறுதல் வைகுந்தா

[2] அமுதும்